0 21

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் பட்டமேல் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

**SNP8246/SNP8336 – கல்வியில் அறியப்படும் செல்நெறிகள்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 17.12.2023 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடைதருக.

## பகுதி – I

1. "கல்வி என்பது குழந்தைகளின் சலுகை அல்ல. அவர்களின் உரிமை." விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட குழந்தைகளுக்கு ஏற்ப மேலே குறிப்பிட்ட கூற்றை நியாயப்படுத்துக.
2. இயலாமையுள்ள மக்கள் (People with disabilities) உரிமைகளை உறுதிப்படுத்தும் குறைந்தபட்சம் மூன்று (03) சர்வதேச சமவாயங்களைக் குறிப்பிடவும் மற்றும் அவற்றில் ஒன்றை (01) சுருக்கமாக விளக்குக.
3. "விசேட கல்விச் சேவைகளை" வழங்குவதன் நோக்கங்களை பொருத்தமான உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக.
4. விசேட தேவைகள் கல்வியின் தற்போதைய சேவை முறையின் ஐந்து (05) சவால்களை பட்டியற்படுத்துக.
5. நிலையான அபிவிருத்தி இலக்கு – 04 பற்றி சுருக்கமாக விளக்குக.
6. முறையில் (informal) கல்வியின் ஐந்து (05) நன்மைகளைக் குறிப்பிடுக.
7. ஒருங்கிணைப்பு (integration) மற்றும் உள்ளடங்கல் (inclusion) ஆகியவற்றுக்கு இடையேயான ஐந்து (05) முக்கிய வேறுபாடுகளை பட்டியலிடுக.
8. நிகழ்நிலை (online) கற்றலின் அர்த்தத்தை பொருத்தமான எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

09.

**i.** எடுத்துக்காட்டுக்களை மேற்கோள் காட்டி கல்வியின் செயல்பாட்டுக் கண்ணோட்டத்தை சுருக்கமாக விவரிக்குக. **(05 புள்ளிகள்)**

**ii.** இயலாமையுடைய நபருடன் (the person with disability) தொடர்புடைய தனிநபரின் விருத்திக்கான கல்வியின் எண்ணக்கருவை விளக்குக. **(07 புள்ளிகள்)**

**iii.** இலங்கையில் இயலாமையுடைய நபர்கள் (the person with disability) தங்கள் தனிப்பட்ட விருத்தியில் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன? **(08 புள்ளிகள்)**

10.

i. உதாரணங்களை மேற்கோள் காட்டி முறைசார் கல்வி முறையின் அர்த்தத்தை விளக்குக. **(05 புள்ளிகள்)**

ii. இயலாமைகள் உள்ள குழந்தைகளுக்கு (children with disabilities) கல்வி கற்பதற்கு முறைசாரா கல்வி முறை எவ்வாறு துணைபுரியும் என்பதை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக. **(07 புள்ளிகள்)**

iii. இலங்கையில் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு கல்வி கற்பதற்கான முறைசாரா கல்வி முறையின் நடைமுறைகளை விளக்குக. **(08 புள்ளிகள்)**

11.

i. விசேட தேவைகள் கல்வியின் அர்த்தத்தை உங்கள் சொந்த மொழிநடையில் விவரிக்குக. **(04 புள்ளிகள்)**

ii. வாழ்நாள் முழுவதும் கற்றல் (Lifelong Learning) முக்கியமானது. இந்தக் கற்றலை எவ்வாறு நிறைவேற்றலாம் என்பதற்கான இரண்டு (02) வழிகளைக் குறிப்பிடுக. **(08 புள்ளிகள்)**

iii. இலங்கையில் உள்ளடங்கல் கல்வி முறையை மேம்படுத்துவதற்கு விசேட கல்வி அலகு முறை எவ்வாறு துணைபுரிகிறது என்பதை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக. **(08 புள்ளிகள்)**

12.

i. முழு உள்ளடங்கல் (Full Inclusion) என்பதன் அர்த்தம் என்ன என்பதை உங்கள் சொந்த மொழிநடையில் விளக்குக். **(05 புள்ளிகள்)**

ii. இயலாமைகள் உள்ள குழந்தைகளுக்கான (children with disabilities) முழு உள்ளடக்க நடைமுறைகளின் நன்மைகளை விளக்குக. **(07 புள்ளிகள்)**

iii. இலங்கையில் உள்ளடங்கல் கல்வியில் வாய்ப்புக்களைப் பெறுவதில் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட குழந்தைகள் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன? **(08 புள்ளிகள்)**

13.

i. அனைவருக்கும் கல்வியின் இலக்கு பரிமாணங்களை நோக்கி அரசாங்கங்கள் செயல்படக்கூடியதைக் குறிப்பிடுக. **(05 புள்ளிகள்)**

ii. அனைவருக்கும் கல்வி என்ற மேற்குறிப்பிட்ட இலக்குகளை அடைவதற்கு இலங்கையின் கல்வி முறை எதிர்கொள்ளும் சவால்கள் என்ன? **(07 புள்ளிகள்)**

iii. அனைவருக்கும் கல்வியின் இலக்குகள் இலங்கை அரசாங்கத்தால் எந்தளவுக்கு எட்டப்பட்டுள்ளன என்பதை ஆராய்க. **(08 புள்ளிகள்)**

14.

i. "விசேட சூழ்நிலைகளில் வைக்கப்பட்டுள்ள குழந்தைகள்" யார் என்பதை விளக்குக. பொருத்தமான இரண்டு (02) உதாரணங்களைத் தருக. **(04 புள்ளிகள்)**

ii. "பொருளாதார நெருக்கடியும் உலகப் போரும் விசேட சூழ்நிலைகளில் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிக்க முக்கிய காரணங்களாகும்."

மேலே குறிப்பிட்டுள்ள கூற்றை எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்குக. **(08 புள்ளிகள்)**

iii. இலங்கையில் விசேட சூழ்நிலையில் உள்ள பிள்ளைகளை நாம் எவ்வாறு முன்னேற்ற செய்ய முடியும் என்பதை எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்குக. **(08 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -